ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2193/30 - 2020 සැප්තැම්බර් මස 16 වැනි බදාදා - 2020.09.16
*2193/30 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்

01. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் 1 ஆவது பந்தியின் நியதிகளின்படி கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல. 1955/22 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் திருத்தப்பட்ட, இல. 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் பகுதி I இலக்கம் 17 மற்றும் 18 இன் கீழ் உள்ள ஏற்பாடுகள் 2020.09.17 ஆம் திகதி முதல் செயற்படும் வண்ணம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:

02.

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 17.<br>தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்,<br>(அ) இலங்கை கணக்காய்வுச் சேவையின் உத்தியோகத்தர்கள், | தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) | I. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல் |

1 A - G 32906 - 23 (2020/09)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| (ஆ) கணக்காய்வு பரிசோதகர் சேவைக்குரிய இல. 06/2006 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்டத்திற்குரிய அதி உயர் தரத்தை / விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | | II. தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பிலான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு. |
| 18.<br>தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்,<br><br>(அ) அதி உயர் தரத்தை / விசேட தரத்தைச் சாராத உத்தியோகத்தர்கள், இல. 06/2006 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்டத்திற்குரிய கணக்காய்வுப் பரிசோதகர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) இணைந்த சேவையைச் சாராத இல. 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் பொருள்கோடப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் | தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) | I. அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு / சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல்<br><br>II. அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br><br>III. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் |

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட இல. 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,

எம்.ஏ.பீ.தயாசெனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/09, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 16.

10-64